**அவசர கூட்ட நிகழ்ச்சி நிரல்**

**கூடலூர் நகராட்சியில் ஜனவரி மாதம் (06.01.2020) ஆம் நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

கூடலூர் நகராட்சிக்கு 14 ஆம் மத்திய நிதிக்குழுவின் 2019–2020 ம் ஆண்டிற்கான மத்திய மானிய திட்ட நிதி ரூ.162.55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்ட நிதியின் கீழ் கூடலூர் நகராட்சி பகுதிகளில் இயற்கை சீற்றங்களினால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிக்கு ரூ.164.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகள் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.8,11,18 மெயின் பஜார் தெருவில் பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைத்தல். | 35.00 |
| 2 | வார்டு எண்.01,18,19 கள்ளர் மடத்தெரு மற்றும் காமாட்சியம்மன் கோவில் தெருக்களில் பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைத்தல். | 25.00 |
| 3 | வார்டு எண்.01,2,20 மந்தையம்மன் கோயில் தெரு,மந்தையம்மன் கோயில் வடக்கு தெரு, எல்லை தெரு, பொம்மையசாமி கோவில் தெருக்களில் பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைத்தல். | 28.00 |
| 4 | வார்டு எண்.05,16 முனியாண்டி கோயில் தெரு மற்றும் வாட்டர் டேங்க் தெருக்களில் பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைத்தல். | 31.00 |
| 5 | வார்டு எண்.16 வாட்டர் டேங்க் பின்புறம் உள்ள தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 22.50 |
| 6 | வார்டு எண்.15 வாட்டர் டேங்க் தெற்கு தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 22.50 |
| **மொத்தம்** | | **ரூ.164.00** |

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.798,அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.2

கூடலூர் நகராட்சியில் நகர் பகுதியில் அன்றாடம் விநியோகம் செய்யப்படும் குடிநீரில் பயன்படுத்தக்கூடிய திரவ குளோரின் வாங்குவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.9,50,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்.799,அனுமதிக்கப்பட்டது.**